## திருவிதாங்கோடுமுதல்நிலைபேரூராட்சி

## கன்னியாகுமரிமாவட்டம்

ந.க.எண்.191/ 2022 நாள்.21.6.2022

### ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

கன்னியாகுமரி மாவட்டம், **திருவிதாங்கோடு**முதல் நிலை பேரூராட்சியில் 2021 -22ஆம் ஆண்டு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தில் மின் கலம் (**Battery Operated Vehicle**) மூலம் இயங்கும் வாகனம் கொள் முதல் செய்திட தகுதிவாய்ந்த நிறுவனங்களிடமிருந்து கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு மூடிமுத்திரையிடப்பட்ட இரண்டு உறை ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சி செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் **12.7.2022ஆம்** தேதி **செவ்வாய்** கிழமை பிற்பகல் 3.00மணி வரை பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளிபடி வங்களை **11.7.2022ஆம்** தேதி **திங்கள்** கிழமை பிற்பகல் 5.00மணி வரை அதற்குரிய தொகையை கீழ்க்கண்டுள்ள விவரப்படி**திருவிதாங்கோடு** பேரூராட்சி அலுவலகத்தில்செலுத்தி (வரிஉட்பட) பெற்றுக்கொள்ளலாம்.

ஒப்பந்தப்புள்ளிகளை மூடிமுத்திரையிடப்பட்ட இரண்டு உறைகளில்வைத்து உறையின் மீதுஎந்த வேலைக்குரிய ஒப்பந்தப்புள்ளி என்றும், திறப்பு தேதி மற்றும் நேரவிவரங்களுடன் தெளிவாக எழுதப்பட்டிருக்கவேண்டும், ஒப்பந்தப்புள்ளியுடன் பணிக்கான வைப்புத் தொகையினை “**Executive Officer., Thiruvithancode Town Panchayat**” எனும்பெயரில்வங்கிவரைவோலை எடுத்து இணைத்து அனுப்ப வேண்டும்.

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை **12.07.2022** ஆம் தேதிசெவ்வாய்கிழமைஅன்றுபிற்பகல் 3.30 மணிக்குசெயல்அலுவலர்அல்லதுஅவரதுஅங்கீகாரம்பெற்றவரால்திறந்துபரிசீலனைசெய்யப்படும்.

| வ. எ ண் | பணிகளின்வி வரம் | மதிப்பீட்டுத்தொ கை (ரூ) | முன்வைப்புத்தொ கைரூ. | ஒப்பந்தப்புள்ளிபடிவகட் டணம் | பணிமுடிக்கவேண்டியகா லஅளவு |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | **மின்கலன் (Sealed Lead Acid) - மூலம் இயங்கும் 6 எண்ணிக்கை வாகனங்கள் கொள்முதல் செய்தல்** | 930000/- | 9300/- | 1560/- | 30 நாட்கள் |

**நிபந்தனைகள்**

1 மின்கலன்மூலம் (Battery Operated Vehicle) இயங்கும் வாகனங்கள்கொள் முதல்செய்திட அமைக்கப்பட்ட துணைக் குழுவில்மின்கலன் (Sealed Lead Acid) மூலம் இயங்கும்வாகனத்திற்கு விவரக்குறிப்புகளின்படி (Specifications) வாகனங்கள்இருக்கவேண்டும். மேலும் ,மின்கலன் (Sealed Lead Acid) வாகனத்திற்குஒருவண்டியின்அடிப்படைவிலைஜி.எஸ்.டி (5 சதவீதம்) நீங்கலாக ரூ.1.45 இலட்சம் என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால், இந்த விலைக்குட்பட்டு ஒப்பந்தப்புள்ளி அளிக்கப்படவேண்டும்.

2 தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும்விதிகள் 2000இன்படி ஒப்பந்தப்ள்ளிகள்பரிசீலக்கப்படும்.

3 ஒப்பந்தப்புள்ளிதகுதிஅடிப்படையில்ஏற்றுக்கொள்ளப்பட்டவுடன்கொள்முதல்ஆணைவழங்கியமூன்று தினங்களுக்குள் ரூ.50/- மதிப்புள்ளமுத்திரைத்தாளில்ஒப்பந்தம்எழுதிக்கொடுக்கப்படவேண்டும்.

4 மின்கலன் மூலம் (Battery Operated Vehicle) இயங்கும் வாகனங்கள்கொள் முதல்செய்தவுடன்செயற்பொறியாளரால்நேரடியாகஆய்வுமேற்கொண்டு, துணைக்குழு அனுமதி வழங்கியுள்ள விவரக்குறிப்புகள் (Specifications) மற்றும் விலை விகிதம் (Rate) அடிப்படையில் பரிசீலனைசெய்துதகுதிச்சான்றிதழ்அளித்தபின்பேசம்மந்தப்பட்டநிறுவனங்களுக்குஉரியவிதிமுறைகளின்படிபட்டியல்தொகைவழங்கப்படும்.

5 உரியகாலத்திற்குள்வாகனங்கள்விநியோகம்செய்யதவறினால்செலுத்தப்பட்டிருக்கும்வைப்புத்தொகை பறிமுதால்செய்யப்படுவதுடன்மறுஒப்பந்தப்புள்ளிகோரப்பட்டுஅதனால்ஏற்படும்சகலஇழப்புகளையும்சம் மந்தப்பட்டநிறுவனங்களிடமிருந்துவசூலிக்கப்படும்.

6 வாகனங்கள் விநியோகம் செய்யப்பட்டு ஓராண்டுகாலத்திற்கு வாகனத்தில் ஏற்படும்குறைபாடுகளை சம்மந்தப்பட்ட நிறுவனத்தாரேதனது சொந்த செலவில் சீரமைக்கும்வகையில் நிபந்தனைகள் ஒப்பந்தப்பத்திரத்தில் இடம் பெறவேண்டும்.

7 ஒப்பந்தப்புள்ளி அளிப்பவர்கள் ஒப்பந்தப்புள்ளிகளுடன் சென்று ஆண்டு முடியவருமானவரி மற்றும் சரக்கு சேவைவரிசெலுத்தியசான்றினை இணைத்தல் வேண்டும்.

8 ஒப்பந்தப்புள்ளிஅளிக்கும்நிறுவனங்கள்சம்மந்தப்பட்டபணிக்குமூன்றாண்டுகளுக்குகுறையாமல்முன் அனுபவம்உள்ளதற்கானஆவணங்கள்இணைக்கப்படவேண்டும்

9 ஒப்பந்தப்புள்ளிகள்அளிக்கப்படும்போதுவிற்பனைவரிதுறையில்பதிவுபெற்றுள்ளதற்கானசான்று இணைக்கப்படவேண்டும்.

10 ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சி மன்றத்தின் அங்கீகாரத்திற்குஉட்பட்டது. பேரூராட்சி மன்ற ஒப்புதலுக்குபிறகு கொள்முதல் ஆணை வழங்கப்படும். பணி ஆணைவழங்கப்படும்போதுகூடுதல் 1% வைப்பு தொகை செலுத்தப்பட வேண்டும்

11 கொள்முதல் செய்யப்பட்ட வாகனங்களுக்குபட்டியல் தொகை வழங்கப்படும் போதுஜி.எஸ்.டி 2% பட்டியல் தொகையில் பிடித்தம் செய்யப்படும்.

12 அடித்தல், திருத்தல் இன்றி முறையாகபூர்த்தி செய்யப்படாத ஒப்பந்தப்புள்ளிகள்வைப்புத் தொகைத் இன்றிஅளிக்கப்பட்டஒப்பந்தப்புள்ளிகள் நடவடிக்கைஏதும் இன்றிதள்ளுபடி செய்யப்படும்.

13 செலுத்தப்படும் வைப்பு தொகை தணிக்கை முடிந்து, தணிக்கை அறிக்கையில் தடையேதும் இல்லாதபட்சத்தில் திருப்பி வழங்கப்படும்.

14 மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு மேல்உள்ள பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி அளிப்பவர்கள் http://www.tenders.tn.gov.in/ , **https://tntenders.gov.in** என்ற இணையதளத்தில் ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் பதிவிறக்கம் செய்தும் ஒப்பந்தப்புள்ளி அளிக்கலாம்.

15 இதர நிபந்தனைகள் அலுவலக வேலைநாட்களில் வேலை நேரங்களில் நேரில்கேட்டு தெரிந்துகொள்ளலாம்.

செயல்அலுவலர்,
முதல்நிலைபேரூராட்சி,
**திருவிதாங்கோடு**

பெறுநர்

1. சம்மந்தப்பட்டநிறுவனங்கள்
2. அலுவலகஅறிவிப்புபலகைக்கு

நகல்

1. மாவட்டஆட்சித்தலைவர்,
   கன்னியாகுமரிமாவட்டம்அவர்களுக்கததகவலுக்காகபணிந்தனுப்பப்படுகிறது
2. பேரூராட்சிகளின்உதவிஇயக்குநர்,
   நாகர்கோவில்மண்டலம்அவர்களுக்கததகவலுக்காகபணிந்தனுப்பப்படுகிறது.
3. உதவிசெயற்பொறியளார், நாகர்கோவில்அவர்களுக்குதகவலுக்காகபணிந்தனுப்பப்படுகிறது.
4. இளநிலைபொறியாளர், **வில்லுக்குறி**பேரூராட்சி (தொகுப்பு)
5. தலைவர், **திருவிதாங்கோடு**பேரூராட்சிஅவர்களுக்குதகவலுக்காக